மணிச்சுடர்

18/19.3.2013

# சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்க குடும்ப தின நிகழ்ச்சி

சிங்கப்பூர், மார்ச் 18–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), சென்ற ஞாயிற்றுக்கிழமை 17–03–2013 அன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை ''சமய நல்லிணக்க குடும்பதின நிகழ்ச்சி'' ஒன்றை சிங்கப்பூர் (EAST COAST PARK) கிழக்கு கடற்கரை பூங்காவில் நடத்தியது.

ஒற்றுமையைப் பறைசாற்றும் வகையிலும், சமய நல்லிணக்கத்தை மேம்படுத்தி ஒன்றுபட்ட சமுதாயமாக வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்தியும் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில், தொடக்க நிலை மாணவ மாணவிகளுக்கான ஓவியப் போட்டி, பலூன் ஊதும் போட்டி, பெற்றோர்களுக்கான மிதி வண்டி போட்டி, வினா விடை அங்கம் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. மதிய உணவும், தேநீர் விருந்தும், அதிர்ஷ்டக் குலுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில், சுமார் 200 பேர் கலந்து சிறப்பித்தனர். தி ப்ரோபசனல் கூரியர் (The Professional Couriers) சிங்கப்பூர் கிளையின் மூத்த நிர்வாகி திரு ராஜன் நாயர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

